**O.S.No. 103/2024 நாள் 03.09.2024. வா.சா.1 – திரு. சண்முகராஜ்.**

**முதல் விசாரணை**

நான் வாதி. 02.03.2023 அன்று நானும், பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட வாடகை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ 1, 07.12.2023–ல் பிரதிவாதி எனக்கு கொடுத்த காசோலை நகல் வா.சா.ஆ 2, 13.04.2023–ல் உணவு பாதுகாப்புத்துறை உரிமம் நகல் வா.சா.ஆ 3, 05.05.2023–ல் பிரதிவாதி வாடகை பெற்றுக் கொண்டதற்காக கொடுத்த ரசீது அசல் வா.சா.ஆ 4, 10.06.2023–ல் பேடிஎம்மில் நான் வாடகை கட்டியதற்கான கணினி ரசீது வா.சா.ஆ 5, 10.07.2023–ல் பிரதிவாதி வாடகை பெற்றுக் கொண்டதற்கான ரசீது அசல் வா.சா.ஆ 6, 10.08.2023–ல் பேடிஎம்மில் வாடகை செலுத்தியதற்கான கணினி ரசீது வா.சா.ஆ 7, அனைத்து நல வியாபாரிகள் சங்கத்திற்கு நான் 13.04.2023–ல் சந்தா செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ 8, 15.05.2023–ல் சந்தா செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.9, 20.06.2023–ல் சந்தா செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.10, 26.08.2023–ல் சந்தா செலுத்தியதற்கான ரசீது அசல் வா.சா.ஆ.11, 17.02.2024–ல் நான் போலீசில் கொடுத்த புகாருக்கான நகல் வா.சா.ஆ 12, 19.02.2024–ல் போலீசார் கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ 13. 04.03.2023–ல் நானும், செய்யது இப்ராஹிம் சாகுல் என்பவரும் எழுதிக் கொண்ட உறுதிமொழி பத்திரம் அசல் வா.சா.ஆ 14. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.